ESTD. 2010

# Crossian Resonance

## A Multidisciplinary Research Journal

(A refereed Biannual Published in June and December)

ISSN 0976-5417

Vol.13 No.2 December 2022

HOLY CROSS COLLEGE (Autonomous)
(Centre for Multidisciplinary Research)
Nagercoil

TAMIL NADU, INDIA

58 Impact of War on Women in Nayomi Munaweera's *Island of a Thousand Mirrors* 397
**A. Fiona Joshi and A. Anishya Dani**

59 Critique of Dominance: An Anti-hegemonic Discourse in Toni Morrison's *Sula* and *Beloved* 401
**M. F. Anne Feril, and A. R. Jemi**

60 Bliss in Blemish: Acceptance of Self in Indra Sinha's *Animal's People* 408
**P. Ashlin Sherly and M. F. Anne Feril**

61 Women under Patriarchal Hegemony: A Study of Meena Kandasamy's *When I hit you: or, a Portrait of the Writer as a Young Wife* 411
**S. Sharon Britto, S. Vetha Priscilla and J. Bhavani**

62 Assault and Amercement in Fyodor Dostoevsky's *Crime and Punishment* 415
**A. R. Jemi and M. F. Anne Feril**

63 Teaching through Hybrid Learning – An Overview 420
**P. T. Anbu Hannah Dora and P. Sathya**

64 Overcoming Victimization: A Thematic Reading of the *Second-Class Citizen* by Buchi Emecheta 426
**V. R. Avina and Subha Ganapathy**

65 Underground Railroad as a path towards Manumission in Colson Whitehead's *The Underground Railroad* 431
**J. Dhanya Lourdes Mishma, L. Helga Virgil and V. Virgin Nithya Veena**

66 சங்க இலக்கியத்தில் மருத நில தாவரங்கள் 436
சி. ஆன்சி மோள்

67 திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் காப்பு பருவம் ஓர் ஆய்வு 440
மா.தே. அருண் மொழி நங்கை

# திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் காப்பு பருவம் ஓர் ஆய்வு

மா.தே. அருண் மொழி நங்கை,

தமிழ்த்துறை, திருச்சிலுவை கல்லூரி(தன்னாட்சி), நாகர்கோவில் - 4
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி – 627012
மின்னஞ்சல்: arunmozhinangai@holycrossngl.edu.in.

**ஆய்வுச்சுருக்கம்**

*பிள்ளைத்தமிழ் சிற்றிலக்கியத்தின் தன்மையை மிகைப்படுத்தும் இலக்கியமாகும். பிள்ளைத்தமிழ் நூல்கள் பத்துப் பருவங்களைக் கொண்ட சிற்றிலக்கியமாகும். பிள்ளைத்தமிழ், ஆண்பால் பிள்ளைத்தமிழ் பெண்பால் பிள்ளைத் தமிழ் என இரண்டு வகைப்படும். ஆண்பால் பிள்ளைத் தமிழ் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர், எனப் பத்து பருவங்களாகப் பாடப் பெறும். பெண்பால் பிள்ளைத்தமிழ் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, கழங்கு, அம்மானை, ஊசல் எனப் பத்துப் பருவங்களாகப் பாடப்பெறும். குழந்தையின் மூன்றாம் மாதம் முதல் இருபத்தோராம் மாதம் முடிய மாதங்களுள் சிறந்த (3, 5, 7, 9, 11, 13, 15, 17, 19, 21) ஒற்றைப்படை எண்களாக அமைந்த பத்து மாதங்களையும் காப்பு முதலிய பத்துப் பருவங்களாக வகுத்துக் கொண்டு பாடுவது பிள்ளைத்தமிழ் என்னும் இலக்கியத்தின் மரபாகும். பிள்ளைத்தமிழ், பெரும்பான்மையாக, ஒவ்வொரு பருவத்திற்கும் பத்துப் பத்துப் பாடல்கள் வீதம் பாடப்பெறுவது ஆகும். இது குழந்தைப் பருவத்தைத் தலைமையாக வைத்துப் பாடப்பெற்றிருந்தாலும் பாட்டுடைத் தலைவரின் வீரச் செயல்கள், சிறந்த குணங்கள் முதலியன புகழப் பெற்றிருக்கும்.காப்புப் பருவம் குழந்தை பிறந்த மூன்றாம் மாதத்தில் பிள்ளையைக் காப்பதற்காக திருமால், சிவபெருமான், உமையம்மை, பிள்ளையார், கலைமகள், அரிகரபுத்திரன், பகவதி, காளி, ஆதித்தர், முப்பத்து முக்கோடி தேவர்கள் ஆகிய தெய்வங்களைப் பாடி வணங்குவதாக அமைந்துள்ளது. பகழிக்கூத்தர் திருச்செந்தூரில் வீற்றிருக்கும் முருபெருமானை உவகையுடன் போற்றி இப்பிள்ளைத் தமிழ் இலக்கியத்தைப் படைத்தருளினார். தெய்வங்கள் எவ்வாறு முருகப்பெருமானைக் காத்து நின்றன என்பதே இக் கட்டுரையின் ஆய்வுப் பொருளாகும்.*

## முன்னுரை

சிற்றிலக்கியங்களுள் பிள்ளைத்தமிழ் இலக்கியமும் ஒன்று. பிள்ளைத்தமிழ் என்பது, தெய்வத்தையோ மக்களுள் சிறந்தவர்களையோ குழந்தையாக எண்ணி அவரின் பெருமைகளைச் செய்யுளில் புகழ்ந்து பாடுவதாகும். காப்புப் பருவம் என்பது, திருமால் முதலாக பல்வேறு தெய்வங்களை வேண்டி குழந்தையைக் காக்குமாறு பாடுவது ஆகும். இது குழந்தையினுடைய மூன்றாம் மாதத்தில் நிகழ்வதாகக் கருதப்படுகிறது. இக்கட்டுரையில் திருச்செந்தூர் முருகனைக் குழந்தையாகப் பாவித்து பகழிக் கூத்தர் பாடும் திறனை ஆய்வு செய்யலாம்.

## திருமால்

இனிமையும் சிறப்பும் அழகும் செழுமையும் கொண்டுள்ள செந்தாமரையில் வீற்றிருக்கும் நான்முகனைப் படைத்ததுடன் அவனுடன் இயற்கையையும் படைத்து, அதில் படைக்கப்படும் உயிர்கள் அத்தனையும் தழைத்து வளரும் அளவுக்குத் தானே வழிவகை செய்யும் அளவினையுடையவனாக இருந்தும் அருள்செய்து காக்கக் கருதி ஒப்பற்ற சங்கினையும் சக்கரத்தையும் கைக்கொண்ட பெருமாளாகிய திருமாலே,

“தேமா மலர்ப்பெற்ற செழும்பொருட்டுச்

செந்தா மரையில் வீற்றிருக்கும்

தேவைப் படைத்துப் படைக்குமுதல்

சேரப் படைத்துப் படைக்கும் உயிர்

ஆமா றளவுக் களவாகி

அனைத்தும் தமைக்கும் படிகருதி

அளிக்கும் படிக்குத் தனியேசங்கு

ஆழி படைத்த பெருமாளே.” (திரு.பிள்:1)

புவிமகள் வீற்றிருப்பதும் சிறந்த மணப்பொருள்கள் விளங்குவதும் மலை போன்றதும் ஆகிய தோள்களையுடைய இந்திரனால் போற்றப்படுபவனும் ஆகாய வெளியினது உச்சியில் வாழும் தேவனால் துதிக்கப்படுபவனும் பொதிகை மலையில் வாழும் அகத்தியராகிய சிறந்த முனிவருக்குத் தமிழ்மொழியைக் கற்பித்த ஆசிரியனாக விளங்கியவன் நீ. முழங்கும் கடலுக்கு மேற்கேயுள்ள திருச்செந்தூரில் குடிகொண்டிருக்கும் முருகப் பெருமானைக் காத்தருள்வீராக என்று திருமாலிடம் வேண்டுகிறார்.

**சிவபெருமான்**

கந்தன், இனிமையாக ஒலிக்கும் மிகுதியான வரிவண்டுகள் முழங்கி இடறச்செய்த கலவைச் சாந்தும் குங்குமப் பொடியும் நிறைந்த நீர் ஒழுகும் பருத்த கொங்கைகளும் வேட்கையும் எழுமாறு, குறவர் குலத்து அழகியான வள்ளியம்மையின் மனத்தில் உறைபவன். இடிபோன்ற முரசுகள் முழங்க எதிர்த்துப் போர்செய்த அரக்கர் படைக்குப் போர்க்களத்தில இடமில்லாமல் செய்து முதிய பேய்கள் நடனமிடும் படி அரக்கர்களைக் கொலை புரியும் வலிமையுள்ளவன். மத நீரைச் சிந்தும் பெரிய யானை முகக் கடவுளான கணபதிக்குக் கருணையே வடிவான தம்பி. பார்வதியின் கையாகிய மலரணையில் கண்துயின்று மழலைச் சொல் பேசும் மைந்தன். பூக்கள் மிகுந்த மணம் வீசும் கற்பக மரத்தின் நிழலில் அரசு புரியும் இந்தரனின் மகள் தெய்வானையின் கணவர்.கலைமகளின் குமரன். அவனைக் காப்பதற்காக சிவபெருமானுடைய மணம் மிகுந்த இரண்டு திருவடிகளையும் வணங்குகிறோம். சிவபெருமான் இளைய பிறைச் சந்திரனும், கங்கை நதியும் பாம்பும் வளரும் சிவந்த சடையை உடையவர். உமையம்மையின் கணவர். சிறந்த சொற்களால் வணங்கும் சிவனடியார்களைக் காத்தவர். சிவபெருமானை நோக்கி குழந்தையைக் காக்க இறைஞ்சுகின்றார்.

**உமையம்மை**

திருச்செந்தூரில் எழுந்தருளிருக்கும் வேலவன் சிறுவனுக்குரிய பதினெண் கணங்களும் நான்கு வேதங்களை ஓதும் முனிவர்களும் வீடுபேறு அடைவதற்கு நின் திருவடிதான் உறுதி வாய்ந்தது என்று எண்ணுகின்றனர்.ஆகையால் நாள்தோறும் நாவெடுத்து ஓதி, உள்ளம் மிக மகிழ்ந்து, சிவந்த கைகளினால் மலர்களைத் தூவி வணங்கி, ‘எம்மை அடிமையாக உடையவனே அஞ்சற்க என்று எமக்கு பாதுகாப்பு அளித்து நீ எம்மைக் காத்தருள்வாயாக’ என்று வேண்ட அவர்களைக் காத்தளித்த நட்பினையுடையவன். விண்மீனின் உச்சி அதிர்ந்து ஆகாயங்களும் அரிய பேரண்டமும் பிளக்குமாறு தோகையை உதறும் மயிலை ஊர்தியாக உடையவன். உபநிடத மந்திர தந்திரங்களில், வெளிப்படாமல் உள்ளே செபிக்கும்

அம்சமந்திரத்தில் அடங்கும் ஐம்புலன்களில் தோன்றியெழும் மகிழ்ச்சி மிகுதியாகும் மனோகரக் கூத்தன்.

"உடுமுகடு அதிர்ந்து விண்த லங்களும்
அரியபகி ரண்ட மும்பி ளந்திட
உதறுதோகை மயூரனைத் தோற்ற முற்றெழும்
உபநிடத மந்திர தந்தி ரந்தனில்
அசபையில் அடங்கும் ஐம்பு லன்களில்
உவகை கூரும னோகரக் கூத்தனை" (திரு.பிள்:4)

போர் செய்யும் பகைவர் நெருங்கும் சிவந்த போர்க்களம் புகுந்த அரக்கரை வெட்டி வீழ்த்திய கொடிய போர்க்களத்தைத் தழுவும் பாடல் பெற்ற விசாகன். பாற்கடல் எனத்தகும் வெண்மையான பற்களையும் செவ்வரி கலந்த கரிய விழியையும் கொண்ட இலக்குமி போன்றவளும் குறக்குடியில் தோன்றியவளுமான வள்ளியம்மையை மணம் புரிந்த வலிய தோளாகிய மலையும் அழகிய மார்பும் கொண்டவன். இலையோடு இதழும் நிறைந்து தழைந்த முகையானது உடைந்து விரிந்து தோன்றிய புதிய தேன் சிந்தும் பசுமையான கடம்பமலரை அணிந்த புதுமையும் குளிர்ச்சியும் கொண்ட அழகன். இமயமலை அடிவாரத் தடாகமான சிறந்த சரவணப் பொய்கை விளங்கவந்த கந்தன். போரை விரும்பும் முருகன். ஆவனைக் காத்தருள்வதற்காக முறைமுறையாக முழங்குகின்ற சதங்கையும் சிலம்பும் ஒலிப்பதும் அன்றலர்ந்த தாமரை மலரைப் போன்றதுவும் ஆகிய உமையம்மையின் சிவந்த திருவடிகள் வாழ்கவெனப் போற்றி வணங்குவோம்.

**பிள்ளையார்**

ஆறுமுகங்களையுடைய முருகன், இம்மை மறுமைப்பயனை அடைய உதவும் மேலான சைவ சமயத்தையும் தேவர் உலகத்தையும் காத்தளித்த களிப்பினையுடையவன். இசையை எழுப்பும் வண்டுகள் தத்தம் பெடையோடு முறையாகக் கூடியதால் அரும்பு மலர்ந்த வெட்சியைப் போன்ற வனப்பையுடையவன். போர்புரியும் மிகுந்த அரக்கர் குலத்தை அளித்தவன். என்னை வழிவழி அடிமையாகக் கொள்ளும் நட்பையுடையவன். தேவர்களும் தம் திருவடியைத் தொழுமாறு, அரிய வேதங்களை உரைத்த பிரமனை அரக்கர் சிறையினின்றும் மீட்ட திறமையுடையவன். அடியவர்களுடைய கொடிய வினைகள் தூளாகுமாறு நடனமிடும் அழகிய பாதங்களை அடியவர்களுக்கு அளிக்கும் வரங்களைக் கொடுப்பவன். குறமகளாகிய வள்ளிநாயகியாரின் அழகில் மயங்கியிருப்பவன். அலைவீசும் அழகிய நகரான திருச்செந்தூரில் விரும்பி வீற்றிருக்கும் குமரன். அவனை நாள்தோறும் காப்பாற்றுவதற்காக, பிள்ளையார் செவிகளில் புகழ் மொழிகளை நிறுத்தி அவரைப் போற்றுவோம். பிள்ளையார், அன்பினாலே தன்னை வழிபட்ட முதியவளான ஔவையாரை ஒரு முறை தன் துதிக்கையால் எடுத்து உயர்ந்த கயிலை மலையில் கொண்டுவிட்ட தன்மையையுடையவர். வடக்கேயுள்ள பெரிய மேரு மலைமீது குருகுல மன்னர்களான கௌரவ பாண்டவர்களின் கதையாகிய பாரதத்தை எழுதி முடித்தவர்.

"கருணையின் வழிபடு முதியவள் தனையுயர்
கயிலையில் ஒரு முறை உய்த்த விதத்தினர்
கனவட கிரிமிசை குருகுல மரபினர்
கதைதனை எழுதிமு டித்த கருத்தினர்". (திரு.பிள்:5)

கலையோடு கூடிய சந்திரனை இரண்டு பிளவாகப் பிளந்து ஒருபக்கத்தே ஒளி வீசுமாறு செய்தவர். நஞ்சுண்ட சிவபெருமானே வலமாக வந்து நன்கு பழுத்த கனியைக் கவர்ந்த நுட்பமான அறிவில் மிகுந்தவர். ஒப்பற்ற இமயமலையில் விரும்பி வீற்றிருக்கும் பெண் யானை போன்ற உமாதேவி பெற்றெடுத்த போர்செய்யும் களிறு என்று சொல்லுமாறு போர் புரிந்தவர். கொத்தாக மலர்ந்த மணம் பொருந்திய மலரணையின் மீது தமது உடலில் மயிர்க்கூச்செறியும்படி மகிழ்ச்சி பெறுவதற்குரிய சக்தியைத் தரித்தவர். தனக்கே உரிய ஒளியான மாணிக்கம் போல ஒளிவிட்டு அழகுறத் திகழும் பவளமும் மதிக்கும்படியான பவள நிறங் கொண்டவர். புள்ளிகளுடைய முகத்தையுடையவர். குடம் போன்ற வயிற்றினைக் கொண்டவர். இத்தகைய பிள்ளையாரிடம் திருச்செந்தூர் பிள்ளையைக் காப்பாற்ற வேண்டுகிறார்.

**கலைமகள்**

பழைமையான மேட்டு நிலத்தின்மீது கடல்நீர் பாயுமாறும் செய்தவன். நஞ்சு நிறைந்த மாணிக்கம் பொருந்திய ஆதிசேடன் என்னும் பாம்பின் தலை நசுங்கும் படும், மந்தரமலை தன் நிலை அழியும் படியும் செய்தவன். கழன்று வீசும் காற்றை எல்லாவிடங்களிலும் சிதற வீசுகின்ற சிறகுகளைக் கொண்ட மயிலை ஊர்தியாக உடையவன் முருகப்பெருமான்.இதனை

"உவரி முதுதிடர் பாயவி டம்பொதி
உரகன் மணிமுடி தூள்பட மந்தரம்
உலைய ஏறிசுழல் மாருதம் எங்கணும்
உதறு சிறைமயில் வாகனன்."

இவ்வாறு பாடுகின்றார். மேலும்

"கவரில் வரிவளை சூல்கொடு தாங்கிய
கமட முதுகினில் ஏறநெ டுந்திரை
கதறு கடலலை வாய்முரு கன்பெறு
கருணை தருகவி மாலைவி ளங்கவே." (திரு.பிள்:6)

வெடிப்பில் தங்கியுள்ளதும் சூல்கொண்டதுமான ஆமையினது முதுகின்மீது வரிகளையுடைய சங்கு ஏறுமாறு நீண்ட அலைகளை வீசுவதும் ஒலிப்பதுமாகிய கடலையுடைய திருச்சீரலைவாய் என்னும் தலத்தில் அவன் இன்பங்கொண்டு எழுந்தருளியுள்ளான். அம்முருகன் பெறுவதும் அவனது அருளைத் தருவதுமான திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழாகிய கவிமாலை நன்கு விளங்குவதற்குக் கலைமகளுடைய சிலம்பணிந்த திருவடிகளை வணங்குவோம்.

**அரிகரபுத்திரன்**

நான்கு வேதங்களாலும் நாள்தோறும் உறுதியாக வாழ்த்தப்படுபவனும் உவமையோடு கூடிய ஆசுகவி முதலான கவிகளைப் படுவதற்கு அருள் செய்யும் நாவலனும் முதிர்ந்து வளர்ந்த

பருத்த வாளைமீன் துள்ளிக் குதிக்கும் கடல் சூழ்ந்த நகரான திருச்செந்தூர்க்குத் தலைவனும் ஆன பழநி வேலனைப் புகழ்ந்து பாடும் பாமாலையாகிய இப்பிள்ளைத் தமிழ் நன்கு தழைத்துச் சிறக்கச் செய்தவர். அரிகரபுத்திரர் கட்டமைந்த நீண்ட சடையில் கிரீட கூட்டம் அணிந்தவர். வளைந்த நீண்ட கருப்புவில்லில் மலர் அம்பைத் தொடுத்தவர். அழகு மிகுந்த சிறந்த பூரணை புட்கலை என்னும் இரண்டு பெண்களையும் தன் இரண்டும் பக்கங்களிலும் இருத்தி மகிழ்ச்சி அடைபவர். அப்படிப்பட்ட அரிகரபுத்திரருடைய திருவடிகளை விடாமல் பற்றிக்கொண்டு முருகனுக்காக வணங்குவோம்.

**பகவதி**

கடலானது வருத்தும் பெரிய அலைகளை வீசும். இருள் போன்று கருமையானது. பேரொலி செய்யும். உவர்ப்பு நீங்காதது. மகர மீன்களைக் கொண்டது. அக் கடல் வற்றி மேடாகுமாறு வேற்படையை உறையிலிருந்து எடுத்து, அரக்கராகிய களையைக் களைந்து, அணிகலன்களை அணியும் இந்திராணியின் மங்கல நாணைக் காத்தவன் முருகன். அவன் வேகமாக செல்லும் மயிலை ஊர்தியாக உடையவன். அம் முருகன் மகிழ்த்து எனது கவிமாலையாகிய பிள்ளைத்தமிழை ஏற்று அருள் செய்ய, பகவதியின் தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்குவோம். அப் பகவதி, அரும்பு விரிந்து செழுமையான தேன் ஒழுகும் வெண்டாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனது முடிசூடிய தலையைக் கிள்ளி எறிவதற்குக் காரணமாக அமைந்தவள். கொடிய கொலைத் தன்மை கொண்ட சிங்கத்தின் மீது ஏறி, வளைத்து குளிர்ச்சி பொருந்திய பிறைச்சந்திரனைப் போன்ற கொம்பும் சிறிய கண்ணும் கொண்ட பெரிய மயிடாசுரன் தலையில் வலிய நடனம் புரிந்த குமரி.

“வெங்கொலை மடங்கல் ஏறி
வளையும் பனிப்பிறை மருப்புக் குறுங்கண்நெடு
மயிடாசுரன் சிரத்தில்
வலியநடம் அடுகுமரி பகவதி.” (திரு.பிள்:8)

முருகன் மகிழ்ந்து எனது கவிமாலையாகிய பிள்ளைத்தமிழை ஏற்று அருள் செய்ய, பகவதியின் தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்குவோம் என்கின்றார்.

**காளி**

ஆய்வு செய்யப்படும் சிறந்த பாடல்களான ஆசுகவி, மதுரகவி, அருமையான சித்திரகவி, வித்தாரகவி ஆகியவை கொடுக்கும் முடிவுகளுக்கு மனம் கலங்காதபடி அடியவர்களுக்கு அருள்செய்பவன் குருபரன்.

“ஆயும் பெரும்பனுவல் ஆசுகவி மதுரகவி
அரியசித் திரகவிதை வித்
தாரகவி இடுமுடிப் புக்குள மயங்காமல்
அடியவர்க்கு அருள் குருபரன்.” (திரு.பிள்:9)

குளிர்ச்சி பொருந்திய பிறைச்சந்திரனைப் போன்ற அழகிய நெற்றியையுடைய நெய்தல் நில மகளிர், தெளிந்த முத்துக்களைக் கொழித்துச் சிற்றில்கட்டி விளையாடும் திருச்செந்தூரில்

வீற்றிருக்கும் வீரன் அக் குருபரன். அவனது புகழைப் பாடுவதற்காக காளிதேவியின் திருவடித் தாமரைகளை நினைப்போம். காளி சினக்கும் கொடிய பகையான தாருகாசுரனைக் கொன்றவள். மண்டையோடுகளை மாலையாக அணிந்தவள். எலும்புகளை மாலையாக அணிந்தவள்.அவள் நீலி. மூன்று கண்களையுடையவள். எட்டுத் தோள்களையுடையவள். அவள் மாதிரி, வீரி, கௌரி. மானை வாகனமாக உடையவள். அவள் கன்னி. நெருப்புப்புகை பரவும் பாலைநிலத்தேவி. கொடுமையும் சிறந்த அழகும் உடைய பாம்புகளைக் கொண்டவள்.அவள் மோடி (வனக்காளி). மழுப்படையை ஏந்திய சிவபெருமானுடன் நடனம் ஆடும் சூலி மற்றும் சாமுண்டி.

"காயும் கொடும்பகைத் தாருக விநாசினி
கபாலிகங் காளிநீலி
காளிமுக் கண்ணிஎண் தோளிமா தரிவீரி
கவுரிகலை யூர்திகன்னி
பாயும் தழற்புகைப் பாலைக் கிழத்திவெம்
பண்ணம் பணத்திமோடி
பரசுதரன் உடன்நடனம் இடுசூலி சாமுண்டி" (திரு.பிள்:9)

## ஆதித்தர்

திருச்சீரலைவாய் என்னும் திருச்செந்தூரில் எப்பொழுதும் மனமகிழ்ச்சியோடு வரிகளையுடைய வண்டுகள் இசைபாடும். அன்னம் நடனமிடும். முள் நிறைந்த வாயும் உள்ளே குடம் போல வளைந்து இருக்கும். வலம்புரிச் சங்கு முத்துக்களை ஈனும்.நீர் ஒடையில் நாரைகள் காணப்படும். கள்ளம் நிறைந்த கரிய கண்ணையும் சிவந்த வாயையும் வெண்மையான பற்களையும் கொண்ட பெண்களான உழத்தியரும் நுளைச்சியரும் மனமகிழ்ச்சி மிகுவர்.

"உள்ளக் களிப்பற வரிவண்டு பண்பாட ஓதிமம் நடிக்க முன்வாய்
உட்குடக் கூன்வலம் புரிமுத்தம் உமிழ்நீர் ஓடையிற் குரகு காணக்
கள்ளக் கருங்கட் சிவந்தவாய் வெண்ணகைக் சடைசியர் நுளைச்சியருளம்
களிகூரும் அலைவாய்." (திரு.பிள்:9)

வெண்மையான அலைகளின் ஊடே மூழ்கி நீரைப் பெரிய பெரிய துளிகளாக வாரி இறைக்கும் பெருங்காற்றைப் போல ஏழு கொடிய குதிரைகளைப் பூட்டியிருப்பதும் ஒற்றைச் சக்கரத்தையுடையதும் ஆகிய பெரிய தேரின்மீது ஏறி, வேதத்தை மேற்கொண்ட வேதியர் வணங்க, ஆழமான கடல் அலைகளைக் கலக்கி, ஊழிக் காலத்தின் இருட் படலத்தை முழுவதும் போக்கி, படரும் ஒளியை விரிவாக்கி வருபவர்கள் அச்சூரியர்கள்.

"வெள்ளிப் பெருந்துளி இறைக்கும் பெருங்காற்று
வெண்டிரையின் மூழ்கியேழு
வெம்புரவி ஒற்றையா ழித்தடந் தேர்ஏறி
வேதபா ரகர் இறைஞசப்
பள்ளக் கடல்திரை கலக்கியூ ழியின் இருட்
படலம்முழு தும்துடைத்துப்
படர்சுடர் விரித்துவரு பன்னிரு பதங்கர்" (திரு.பிள்:9)

அத்தகைய திருச்செந்தூரை விரும்பிய வேலவனை எங்கள் கந்தனைக் காப்பாற்றுவீராக என்று பன்னிரண்டு சூரியர்களின் அழகிய திருவடி மலர்களைத் தலைமீது சூடுவோம்.

**முப்பத்து முக்கோடி தேவர்கள்**

முருகன், அம்பலத்தில் ஆடுபவரும் ஊமத்தம்பூ மாலையை அணிந்தவருமாகிய சிவபெருமானுக்குப் பெரும் பொருளை ஓதி உபதேசித்தவன். கடல்படியும் நகரான திருச்செந்தூருக்கு உதவியாளன். புலமைக்கும் நீதிக்கும் ஒப்பற்ற நண்பன். மழலை மொழிபேசும் பாலகன். குருதிக் கறை படிந்த ஒளிவீசும் வெற்றியைத் தருவதாகிய வேற்படையையுடையவன். குறக்குடியிற் பிறந்த பெண்ணான வள்ளிநாயகியின் இன்பத்திற்கு மோகம் கொண்டவன்.

"பொதுவில் ஆடும் மத்தற்கு நீடு
பொருளை ஓதி ஒப்பித்த சீலர்
புணரி தோய்ந கர்க்குச்ச காயர்
புலமை நீதி ஒப்பற்ற கேள்வர்
குதலை வாய்மொ ழிச்சத்தி பாலர்
குருதி பாய்க திர்க்கொற்ற வேலர்
குறவர் பாவை சொற்கத்தின் மோகர் குமரர்." (திரு.பிள்:10)

அத்தகைய முருகனைக் காப்பதற்கு ஏற்ற காவலர்கள் முப்பத்து முக்கோடி தேவர்களே. அத்தகைய தேவர்கள், இனிமையான கீதம் பாடுவதிலும் கல்வியிலும் வல்லவர்கள். சடைமுடியில் மகுடம் அணிந்தவர்கள். முத்துக்களைப் பதித்த மேலாடையர். மௌனமான முனிவர்கள். மயிலையுடைய முருகனிடத்தில் அன்புள்ளவர்கள். மனைவியோடு வாழும் வாழ்க்கையில் பற்று வைத்தவர்கள். பழமையான சொற்களைப் பேசும் நாவினையுடையவர்கள். முனிவர்கள் செய்யும் வேள்வியை விரும்புவர். உணவில் விருப்புள்ளவர்கள். முடிவிலாத கற்பகாலத்தின் ஊழி முதல்வர்கள்.

"மதுர கீத விற்பத்திவாணர்
மகுட வேணி முத்துத்த ரீகர்
மவுன மோனர் பத்திக்க லாபர்
மனையில் வாழ்வு வைப்புற்ற நேயர்
முதுமை யான சொற்பெற்ற நாவர்
முனிவர் வேள்வி இச்சிக்கும் ஊணர்
முடிவிலாத கற்பத்தின் ஊழி
முதல்வர் தேவர் முப்பத்து மூவரே" (திரு.பிள்:10)

அத்தகைய திருச்செந்தூரை விரும்பிய வேலவனை எங்கள் கந்தனைக் காப்பாற்றுவீராக என்று முப்பத்து முக்கோடி தேவர்களின் திருவடிகளில் மலர்களைச் சூடி வணங்குவோம்.

**முடிவுரை**

பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் முதல் பருவம் காப்பு பருவம் ஆகும். அதன்படி திருச்செந்தூர் பிள்ளைத்தமிழின் முதல் பருவம் காப்பு ஆகும். இதில் திருமால், சிவபெருமான்,

உமையம்மை, பிள்ளையார், கலைமகள், அரிகரபுத்திரன், பகவதி, காளி, ஆதித்தர், முப்பத்து முக்கோடி தேவர்கள் ஆகிய தெய்வங்களை நோக்கி பாலகனாம் முருகனை காத்தருளுமாறு ஆசிரியர் வேண்டுகிறார். மனிதர்கள் பொதுவாக தங்கள் நலன் வேண்டி இறைவனிடம் முறையிடுவது வழக்கம். ஆசிரியர் முருகனை குழந்தையாக பாவித்து தெய்வங்களிடம் முறையிடுகிறார். திருச்செந்தூர் முருகனை வழிபட்டால் கல்வி, செல்வம், ஆயுள், நிலபுலம், நன்மக்கள்பேறு அனைத்தையும் அடையலாம் என்ற நம்பிக்கை இன்றளவும் உள்ளது. தன்னுடைய வயிற்றுவலியைப் போக்கிய முருகன் அனைவருக்கும் நலமே அருளுவான் என்ற நம்பிக்கையுடன் பகழிக்கூத்தர் பாடியுள்ளார். காப்பு பருவத்தில் அவர் ஒவ்வொருவராக அழைத்து மூன்று மாத குழந்தையைப் பாதுகாப்பதற்காக வேண்டுவது அவரின் பக்தி மிகுதியையே காட்டுகின்றது. பக்தியால் இறைவனையே குழந்தையாக்கி குழந்தைக்காக ஒவ்வொரு இறைவனிடமும் வேண்டுவது அவரின் அளவிடமுடியா பக்தியை வெளிப்படுத்துவதாக உள்ளது.

**துணை நூற்பட்டியல்**


1. இந்திராகாந்தி பு., திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ். முதற்பதிப்பு. சரஸ்வதி மகால் நூலகம்: தஞ்சாவூர், 2015.
2. வேலுப்பிள்ளை ஆ., தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும். முதற்பதிப்பு. பாரி புத்தகப் பண்ணை: சென்னை, 1969.
3. நல்லூர் சரவணன் சா., சங்க இலக்கியச் செம்மை நலம். இரண்டாம் பதிப்பு. பாவை பப்ளிகேசன்ஸ்: சென்னை, 2010.
4. கவிராச பண்டாரத்தையா, திருவிலஞ்சி முருகன் பிள்ளைத்தமிழ். முதற்பதிப்பு. தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்: சென்னை, 1957.

A Crossian Publication